காவியம்

ஆசிரியர்: சுரதா.

(கவிதை வார இதழ்)

சுவடி 1: ஏடு 6 | சென்னை : திருவள்ளுவராண்டு, 1987, ஐப்பசி 11 28—10—55 | விலை அணு 1

சோணுடு ஈந்த செந்தமிழ்ச் செல்வம்

சித்ரா

நெல்விளையும் தஞ்சைமா வட்டந் தந்த,
நீலநிறச் சிற்பத்தை; வையந் தேடும்
செல்வத்தைத், தென்பகுதி சமுதா யத்தைச்
சீர்திருத்தி வந்திட்ட நமது பன்னீர்ச்
செல்வத்தைப் போற்சிறந்த மேதை; இந்தச்
செகந்தன்னில் தோன்றுவது அரிது ! இந்த
நல்லறிஞன், நற்குணத்தோன், குறைபா டின்றி
நாடாளத் தகுதியுளோன் இப்போ தில்லை !

பலவகையில் தமிழர்க்கு நன்மை செய்த
பண்பாளன் ! முன்னாள்,தென் னிந்தி யாவின்
நலஉரிமைச் சங்கத்தில் பங்கு ஏற்று
நல்லதொரு தளபதியாய் விளங்கி வந்தோன் !
இலையாகக் கொழுந்தாகப் பெரியா ரின்முன்,
இந்நாட்டில் பலமனிதர் இருந்த போது,
மலராகப், பெரியாரே போற்று கின்ற
மலையாக, இருந்தவர்நம் **பன்னீர்ச் செல்வம் !**

தோளுக்குத் தந்தமலர் மாலை தன்னைத்
தூயபெரி யாரவர்கள், வயது மிக்கத்
தாளுக்குச் சூடுகின்றேன் என்று கூறித்
தலைவர்க்கு மரியாதை தந்த, இந்த
ஆளழகன். அருஞ்செயலோன், நமது நாட்டை
ஆள்வதற்கு இன்றில்லை. ஆத லாலே,
தேளுக்கு அதிகாரம் கொடுத்தாற் போன்று,
தேசத்தை ஆள்கின்றார் இப்போ துள்ளோர் !

ஆரெதிர்ப்பு வந்தாலும் அஞ்சி டாத
ஆண்சிங்கம் ! பெரும்பண்ணை யூரின் தங்கம் !
பேரறிவு உடையோனின் திறமை கண்டு,
பெருமக்கள் வியக்கின்ற போது, இங்கே
ஓரறிவு பெற்றதொரு மரத்தைப் போன்றோர்
உளறுவதில் பொருளுண்டா ? சத்து உண்டா ?
நாரெங்கே ? மலரெங்கே ? உலகம் போற்றும்
நம்பன்னீர்ச் செல்வமெங்கே ? இவர்கள் எங்கே ?

சாவா மருந்து



**கண்ணுக் கினிய சபைக்குமணி கற்றோனே
விண்ணுக் கினியமணி வெய்யோனே—வண்ணநறுஞ்
சந்த முலையாள் சயனத் தினியமணி
மைந்தன் மனைக்கு மணி.**

—நீதிவெண்பா

★ ஓமான் கடல் கொண்ட ஒப்பிலாமணி ★

இதயம்

சென்னை 28—10—55 வெள்ளி

இலங்கை தருகிறது இனிக்கும் செய்தி!

இனிமேலே ஆட்சிமொழி எங்கள் நாட்டில்
என்னஎனில் சிங்களமும் தமிழு மாகும்.
தினைத்துணையும் இதில்மாற்றம் இல்லை என்று
செப்பிவிட்டார் தென்னிலங்கை அரசாங் கத்தார்.
கனிச்சாறு, கற்கண்டுபோன்ற செய்தி
காதினிலே வீழ்ந்தவுடன் குளிர்ந்தோம். ஆனால்,
இனிக்கின்ற இந்நிகழ்ச்சி நமது நாட்டில்
எப்போது நடக்குமென எதிர்பார்க் கின்றோம்?

தமிழகம் தயங்குவதேன்?

தெளிந்துள்ள நறுந்தேனைப் போலி னிக்கும்
செந்தமிழை ஆட்சிமொழி யாய்அ மைச்சர்,
குளித்தவுடன் உடைமாற்றல் போல்வி ரைந்து
கொண்டுவந்தன் றேஇருத்தல் வேண்டும்! இன்னும்
வெளிச்சத்தம் கொடுக்கின்றார் நாட்டி னர்க்கு,
விரைவில்தமிழ் ஆட்சிமொழி ஆகு மென்று.
அளித்துவரும் உறுதிமொழி நமது நாட்டில்
அவசரமாய் நிறைவேற எதிர்பார்க் கின்றோம்!

★

<u>இசைப்பாடல்–6</u>

இலங்கை இராவணன் போலே!

எடுப்பு

இலங்கை இராவணன் போலே-வீரர்
எவருண்டு இப்புவிமேலே-தென் (இலங்கை)

(மேல் எடுப்பு)

மலைவளத்தால் பருவமழை வளத்தால்-நவ
மணிவளத்தால் அரண் மனைவளத்தால்சிறந்த (இலங்கை)

(அமைதி)

தேயாத கீர்த்தி, தினந்தோறும் கண்டவன்,
செந்தமிழ் நறுந்தேனை வண்டுபோல் உண்டவன்,
ஓயாது நாட்டின் நன்மைக் குழைத்தவன்,
உண்மை வழி நின்ற உலகப்பேரறிஞன் (இலங்கை)

சாதிமதம் இன்றி தமிழாட்சி செய்தவன்,
சாத்திரப் பார்ப்பனன் தலைதனைக்கொய்தவன்,
வேதம், விதி என்னும் ஏட்டினைக் கிழித்து,
வீணர்கள் செய்திட்ட யாகத்தை அழித்த (இலங்கை)

சொல் விளக்கம்:

கறையடி

அந்தணரைப் போர்வாளால் வெட்டிச் சாய்த்த
அதிவீரன் இராவணனின் இலங்கை சென்று,
செந்தமிழின் திறத்தாலே, வாத மிட்டுச்
செல்வத்தை, யானைகளைப் பரிசு பெற்று,
வந்திட்டான் வாணனெனும் கவிஞன். இல்லம்
வந்தவனை அக்கவிஞன் மனைவி கண்டு,
சந்தனத்தைத் தொட்டதுபோல் குளிர்ந்தாள், இன்பந்
தரும்மனைவி தனைக்கண்டு தண்ணீ ரானன்.

ஏரெடுக்கும் தமிழர்க்குப் புதுமை யான
இலக்கியங்கள் தந்துவந்த கவியைப் பற்றிப்
பேரெடுத்தப் பெரியோர்கள் ஒன்று கூடிப்
பெருமையொடு நாளெல்லாம் பேசிக் கொண்டார்.
ஊருக்கு யானை வரக் கேட்ட மக்கள்,
உற்சாகத் துடன்வந்து அதனைப் பார்த்தார்.
நீரெடுக்கச் சென்றிட்ட பெண்கள், எட்டி
நின்றபடி, 'உயிர்மலையை' உற்றுப் பார்த்தார்.

பெண்களெலாம் அச்சத்தோ டெட்டி நிற்கப்
பெருங்கவிஞன் மனையாட்டி அதனைப் பார்த்துக்
கண்ணம்மா ஏன்அஞ்சு கின்றாய்? என்றாள்.
கரும்பென்று என்னை இது எண்ணி விட்டால்,
பெண்மானே என்னாகும்? என்று கூற,
பெருங்கீர்த்தி பெற்றவனின் மனைவி; நீல
வண்ணப்பூ வேஉன்னை இந்த யானை,
வள்ளிஎன விரட்டாது, வருக என்றாள்!

துறைமுகத்தி லேவந்து நிற்கும் கப்பல்,
தொடர்ந்துஎழும் அலையாலே அசைதல் போல
பிறைபோன்ற தந்தங்கள் உடைய அந்தப்
பெரும்யானை அசைந்தபடி நிற்கக் கண்டு,
கறையடிஎன் கின்றாரே யானை தன்னைக்
கற்பூரப் பெட்டகமே, எதனால்? என்று,
அறிவறிந்த பெரியோர்கள் போற்று கின்ற
அறிவாளன் மனைவிதனை அன்னம் கேட்டாள்.

உயர்ந்தமலை போன்றிருக்கும் யானை கட்கு,
உரல்போன்று காலடிகள் இருப்ப தாலே,
வயதாலும், அறிவாலும் முதிர்ந்த முன்னோர்,
வழங்கிவர இச்சொல்லைக் குறிப்பிட் டார்கள்.
கயல்விழியில் மின்னல்தனைக் காட்டும் பெண்ணே,
கறைஎன்றால் உரல்என்று அர்த்தம் என்றாள்.
"உயர்வான இந்தச் சொல் வைத்தி ருக்கும்
உட்பொருளை இன்றறிந்தேன் அக்கா!" என்றாள்!

★ ★ ★

கோவண காவியம்!

சேவலுக்கு முன்னெழுந்து, பஜனை பாடித்
தெருசுற்றும் பக்தர்களே! நீங்கள் இங்கு,
காவிகட்டும் மொட்டையர்கள் எழுதி வைத்த
கருத்தற்ற செய்யுட்கள் படிந்தி ருக்கும்
கோவணகா வியந்தன்னைப் படிக்கும் போது
குறள்காட்டும் பாதையிலே செல்லும் நாங்கள்,
ராவணகா வியம்படித்தால் என்ன தப்பு?
ராமாய ணம்நடித்தால் கத்து வானேன்?

வரலாற்றுக் காட்சி

காதலனை வெந்நீரில் வேகவைத்த காரிகை

கன்னத்தைக் கேட்டுக்கொண் டிருந்தான்; ஆசைக்
காதலியின் முன்னின்று அகில்கான். வெள்ளை
அன்னத்தின் அழகுநடை போல்ந டக்கும்
அவுரங்க சீப்மன்னன் புதல்வி நிஸ்ஸா,
புன்னகையோ டன்னவனின் தோளில் சாய்ந்தாள்.
புதுநீல முக்காடு தன்னை நீக்கிக்
கன்னத்தில் முகம்பார்த்தான் முதலில்; பின்னர்க்
கனிஉதட்டில் கன்னத்தைச் சேர்த்துக் கொண்டான்.

ஒருவண்டு, வாயவிழ்ந்த மலரின் மீது,
உட்கார்ந்து, அம்மலரை அசைத்தல் கண்டு,
கருவிழியி னால்சுவைத்தார். உணர்ச்சி யோடு,
கைவிரலால் அதைச்சுட்டிக் காட்டிக் கொண்டே
இருட்டுக்குள் சென்றார்கள்; சிறிது நேரம்
ஏதொன்றும் பேச்சில்லை ஆங்கே; பின்னர்
சிரித்துக்கொண் டேவந்தார் வெளியில்; வந்து,
சிங்காரத் தோட்டத்தில் உலவ லானார்.

முத்தத்தி லேயிருக்கும் இனிமை, நீண்ட
முதிர்கரும்பி லும்இல்லை என்றாள். காதல்
நித்திரையி லேசோர்வு ஏற்பட் டாலும்,
நிச்சயமாய் அதைப்போன்ற ஓய்வு இல்லை;
தித்திக்கும் மாம்பழமே என்றான்; கேட்டுத்
தேன்மொழியாள், காதலனின் முகத்தை நோக்கிச்,
சத்தத்தை அடக்குங்கள், என்று கூறிச்
சந்திரகாந் தக்கல்லின் மேல மர்ந்தாள்

சிப்பத்தைப் பிரித்தெடுத்த முத்தே! வானம்
சேகரித்த விண்மீனே! உன்னைப் போல,
இப்பாரில் பேரழகுப் பொருள்எ னக்கு,
இப்போதும் எப்போதும் இல்லை, என்று
கொப்பளித்த ஆசைவச னங்கள் தந்து
கொண்டிருக்கும் தருணத்தில், அங்கே வந்த
துப்பாக்கிச் சேவகர்கள் அதனைப் பார்த்துத்
துடித்தோடி வேந்தனிடம் தெரிவித் தார்கள்!

ஆத்திரத்தோ டவுரங்க சீப்பு மன்னன்,
அரண்மனைப்பூந் தோட்டத்தை நோக்கி வந்தான்.
பூத்தமலர் விழியாளும், அவனும் அங்குப்
போர்வேந்தன் வரக்கண்டு திகைப்ப டைந்து,
சேர்த்தஉடல் பிரித்தார்கள், நடுங்கி னார்கள்.
சிங்காரி, உடனேஅங் கிருந்த வெந்நீர்ப்
பாத்திரத்தில் காதலனை மறைக்க லுற்றாள்;
பார்வேந்தன் இச்செயலைப் பார்த்து விட்டான்!

யாதொன்றும் அறியாத பேதை போல
'எங்கப்பா வந்தீர்கள்' என்று, அந்த
மாதரசி மன்னவனைப் பார்த்துக் கேட்டாள்.
மன்னவனோ, ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு,
'சீதநிலா வையிழுக்கும் இரவில், இங்கே,
சிறுகாற்று வாங்குதற்கு வந்தேன்' என்றான்.
கோதைமெது வாய்நழுவ ஆரம் பித்தாள்.
கொற்றவனோ கண்சுருக்கி மகளைப் பார்த்தான்!

'இதுஎன்ன அடுப்பின்மேல்?' என்று அந்த
இளவரசி தனைக்கேட்டான், டில்லி வேந்தன்.
பதைபதைத்த மனத்தோடு, 'தண்ணீர் உள்ள
பாத்திரமப் பா'என்றாள் செப்புன் நிஸ்ஸா.
'கொதிக்கட்டும் இத்தண்ணீர், புதுநெ ருப்புக்
கொண்டுவந்து அடுப்பேற்று உடனே' என்று,
அதிகாரக் குரலோடு அரசன் சொன்னான்.
அதைக்கேட்டு, அம்மங்கை அதிர்ந்து விட்டாள்!

பாத்திரத்தின் அருகினிலே உடனே அந்தப்
பத்தரைமாற் றுத்தங்கம் நடந்து சென்றாள்.
ஆத்திரத்தோ டவ்விடத்தில் நின்ற வேந்தன்,
'ஆகட்டும் சீக்கிரத்தில்' என்று ரைத்தான்.
நீர்த்திவலை விழியோடு அகில்கான் உள்ள
நீர்ப்பாத் திரந்தன்னைத் தொட்டு நின்று,
'பூத்தமலர் தொடும்வண்டே' என்று ரைத்தாள்.
பொன்னழகன் பெருமூச்சு மட்டுந் தந்தான்!

'என்னருமைக் காதலரே! நீரும் நானும்,
இணைபிரியா அன்றிலென இருந்து வந்தோம்.
தின்பண்டச் சுவைமுத்தம் முடிக்கும் போது
திடீரென்று அகப்பட்டுக் கொண்டோம் இன்று!
என்செய்வேன் இப்போது? 'தீயை மூட்டி,
எரித்திடுக' என்கின்றார் எனது தந்தை.
பொன்வில்லே! உமைநானும் எரிப்ப தற்கோ
புவிமீது இதுநாளும் காத லித்தேன்!

'தேன்கொடுக்கும் கோப்பைதனைச் சுக்க லாக்கத்
தீர்மானம் செய்துவிட்டார் எனது தந்தை,
வான்மழையே! என்மானம் நிலைக்க, நீங்கள்,
மௌனத்தோ டெனக்காக இறந்துபோக,
நான்கேட்டுக் கொள்கின்றேன்' என்று, கூறி
நைந்தஉளத் தோடுதுயர் முகந் திருப்பிக்
கூன்பிறையைத் தொழுகின்ற வேந்தைப் பார்த்தாள்.
கொள்ளிவிழியால் மகளை மன்னன் பார்த்தான்.

காதலனைப் பாத்திரத்தில் நிறுத்தி, கெண்டைக்
கண்மீது கரிக்கின்ற துளிநி றுத்தி,
வேதனையோ டங்கிருந்த அடுப்பில், காய்ந்த
விறகிட்டுத் தீமூட்டிக் கொதிக்க வைத்தாள்.
சாதத்தைப் போல்இளைஞன் வெந்தான். காதல்
சரித்திரத்தின் ஓர்பகுதி இறந்த தாங்கே!
பேதையவள் கைவிரலால் நீர்வ ழித்தாள்!
பேரரசன், கதைமுடிந்த தென்றான்; சென்றான்.

—சுப்பு ரத்தினதாசன்.



அரங்கேற்றம்!

நீதிதானு ?

வெண்ணிலவில், பூங்காவில், மணற்ப ரப்பில்,
விளையாடத் துடிக்கின்ற நெஞ்சத் தோடு
கண்ணழகி ! விரைந்துற்றேன் என்ப தெல்லாம்
கருதாமல், தலைகவித்து நிலத்தைப் பார்த்த
வண்ணமன்றே நிற்கின்றுய் ! நித்த நித்தம்
வந்துபுகும் நாணத்தின் வரவை ஏற்றுக்
கண்ணேரப் பார்வையினைத் தூதனுப்பிக்
காலத்தை வீணுக்கல் நீதி தானு ?

நிறைமதியில், மலர்க்காவில், தனியி டத்தில்
நினைவகன்று இளமைத்தேன் மாந்த எண்ணிப்
பிறைநுதலாய் ! ஓடோடி வந்தேன் ! நீயோ,
பேச்சின்றி: நாணத்தின் பிடியிற் சிக்கி
மறைக்கின்றுய் உளத்துடிப்பை எல்லாம் ! இன்ப
மலர்ச்சியுடன் இதழ்சேர்க்கா திருப்ப தெல்லாம்
முறையோ! சொல் வளையொலியைத் தூத னுப்பி
மோனத்தை நீட்டித்தல் நீதி தானு ?

நில வொளியில், மலையருவிக் கரையி டத்தில்
நீங்காத இன்பூட்டும் அழகு நங்காய் !
பலவினிய விளையாட்டு நிகழ்த்த எண்ணிப்
பறந்துவந்தேன் உனைநோக்கி ! நீயோ சற்றும்
உலகறிலே அறியாத தன்மை காட்டி
உடன்பிறந்த நாணத்தின் உறவை எண்ணி
நலமுடையாய் ! புன்னகையைத் தூத னுப்பி
நகராமல் நிற்பதெலாம் நீதி தானு ?

சி. திருநாவுக்கரசு.
கிச்சிப்பாளையம், சேலம்.

காற்றே மலரே !

உயர்ந்தநற் றென்றற் காற்றே
ஓடிவா! முன்னுள், கீர்த்திப்
பெயருடன் வாழ்ந்து எம்மைப்
பெற்றதாய்த் திராவி டத்தை
முயன்றுழைக் காமல் வாழ்வோர்
வேண்டாமென் கின்றுர்! காய்ச்சல்
துயருடன் வாழ்வோன் உன்னைத்
'தூரப்போ' என்ப தைப்போல்!

உலகெலாம் போற்றும், நல்ல
உயர்நிலை கொண்டி ருக்கும்
மலரேநீ வாழ்க ! எங்கள்
வளமார்ந்த திராவி டத்தைச்
சிலர்வேண்டா மென்பார், அன்னுர்
தேகத்தோல் சுருங்கிப் பற்கள்
கலகல வெனஉ திர்ந்து
கம்பூன்றும் கிழவி, தள்ளு !

—எ. எம். அனிபா, பேரையூர்.

உயர்திணையும், அஃறிணையும்

இணையிழந்தா லிறந்துபடும் அன்றிலோ
அஃறிணையாம்
மனையிழந்தால் மறுதாரம் தேடிடுவோன்
உயர்திணையாம்
கற்பொழுக்கம் மிளிரவாழும் புருவினம்
அஃறிணையாம்
பொற்புடனதைப் போற்ருத பூவையர்கள்
உயர்திணையாம்
நன்றிக்கு நற்சான்ரும் நாயினமோ
அஃறிணையாம்
நன்றிகெட்ட நயவஞ்ச மனிதர்
உயர்திணையாம்
கூட்டுறவோடு வாழ்கின்ற காக்கையினம்
அஃறிணையாம்
கிடைத்ததைச் சுருட்டுகின்ற கீழ்மதியோர்
உயர்திணையாம்.

—க. பொ. இளம்வழுதி,
கவிதீர்த்தான்குப்பம்.

பார்ப்பது ஏனே?

அந்தியின் எதிரே அலர்ந்த மதியே !
மஞ்சுக் கஞ்சி மருளும் நிலவே
மஞ்சள் வதன வனிதை வனப்பே !
இலஞ்சியில் இலங்கும் இளமுகை அதன்மேல்
வலஞ்செய் வண்டுகள் வணங்கிடும் அதனில்
வெள்ளை அல்லி தண்பனிக் கொள்ள
கொள்ளை கொள்ளையாய் வள்ளல் அள்ளி
வழங்குவாய் வல்வில் ஓரிக் கிணையாய்
மலங்கிய இலஞ்சியில் அள்ளி அல்லி
பனிக்கும் உன்னைப் பார்ப்பதும் ஏனே ?
இனிக்கும் உள்ளம் கொள்ளத் தானே?

—அ. உலகரசு, பாலக்கோடு.

மான் பட விளக்கம்

நினைவினில் இனிமை சேர்த்து,
நித்தமும் அன்பு காட்டும்,
மனமொத்த கணவன், வீடு
வரும்வழி விழியைப் போக்கிக்,
கனிவொடு காத்து நிற்கும்
காரிகை யாளைப் போல
இனித்திட துணையை நீயும்
எதிர்பார்க்கும் மானே வாழி !

—குண்டல கேசி, சென்னை-11.

★

பயங்கரப் பழைமைக் குன்றில்,
பார்ப்பன விலங்கைக் கண்டு,
புயலெனத் தாயும் சேயும்
புல்வெளி நோக்கி ஓடி,
அயர்வெலாம் அகலும் வண்ணம்,
அறிவுடை நதியைக் கண்டு,
பயன்பெறும் நோக்கத் தோடு,
பனிநீரைப் பருகல் பாரீர் !

—மு. கந்தன், தாம்பூலவணிகர், லால்குடி.

★

பொன்னியின் கரையில் நின்று,
புதுப்புனல் பருகும் குட்டி,
அன்னைமான் தானும் நீரை
அருந்தாது சலச லக்கும்,
சின்னதோர் ஒலியைக் கேட்டுச்
சிறுசெவி இரண்டும் தூக்கி,
என்னமோ ஏதோ என்று,
எதிர்த்திட நிற்றல் பாரீர் !

—சே. கிருட்டிணசாமி, அரக்கோணம்

★

ஒன்றுபெற் றுளம கிழ்ந்து
உயிரதைக் காக்கின் றுய்நீ,
சென்றுபார் தமிழ கத்தில்,
சேய்பல பெற்றெ டுத்துப்,
பொன்னுடல் காப்ப தற்கும்
புரியாது விழிக்கின் றுர்கள்
வென்றியை நீய வர்க்கு,
விளக்கிட வேண்டும் மானே !

—சோ. கண்ணப்பன், பேரூர்.

★

பகைவரைப் பார்த்த தாய்மான்,
பச்சிளங் குட்டி யோடு,
மிகவிரை வாக ஓட,
மறித்ததோர் பெரிய ஓடை.
அகம்புறம் நடுக்கந் தோன்றி,
அடுத்துள கரையை நாடும்
வகையினைத் தேடும் மானின்,
மனந்தரும் குறிப்பைப் பார்மின் !

—ந. அலி, குளித்தலை.

★

காவியம் கண்டேன் ; களிப்பு எய்தினேன்
காவியம் படித்தேன் களைப்பு நீங்கினேன்
உங்கள் காவியம் உலகு எங்கிலும்
சிறந்த புகழொடு விரிந்து பரவி,
வளர்க என்று வாழ்த்துகின் றேனே !

—வ. சின்னத்தம்பி, தொளார்.

★

வாழ்த்து :

பொன்னுன திராவிடத்துப் புரட்சி வீரன் !
புவியேற்கும் பாரதியின் தாசன் என்கோ !
கண்ணுன 'குயில்' விட்டுச் சென்ற தெல்லாம்,
காணுகிறேன்காவியத்தில்-மகிழ்கின்றேன் நான்

—ந. மா. முத்துக்கூத்தன்
எம்.ஜி. ஆர். நாடகமன்றம், சென்னை-14

என் அன்புக் கவிஞருக்கு வணக்கம்.
தங்களின் கவிதை ஏடாம், 'காவியம்'
திராவிடரின் கலைவளம் காட்டும் ஓவியம்!

—ஏ. கே. வில்வம், ஆற்காடு.

மங்காத புகழுடன் மனங்கவர் காவியம்,
வளரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

—P. ஐயம்பெருமாள், காகப்பட்டினம்

நமது மேடை

16—10—55ல் சித்தூரில்

சித்தூர் நகரில் சிந்தனைச் சிற்பி,
சிற்றர சவர்கள் தலைமை தாங்கி,
காந்திச் சாலைக் கழகக் கிளையில்
அறிஞர் திலகம் அண்ணு அவரின்
உருவப் படத்தை உவகை யுடனே,
திறந்து வைத்துச் சிறப்புடன் அன்னுர்
சேவை யின்னும் தேவை யென்றுர்,
காது விரும்பும் கனிமொழி யாலே!

21-10-55 ல் சிந்தாதிரிப் பேட்டை கலைக்கதிர்க் கழகத்தில்

அ. பொ. அரசு அவர்கள் தலைமையில்
அறிஞரிற் சிறந்த அண்ணு படத்தை
சிந்தனைச் சிற்பி சிற்றர சவர்களும்,
திரு. வி. க. வின் உருவப் படத்தைக்
ஆசிரியர் தோழர் சுரதா அவர்களும்,
திறந்து வைத்துச் சிறப்பை விரித்துச்
சொற்பொழி வாற்றினர் சுந்தரத் தமிழிலே,

29-10-55 பந்தநல்லூரில்

அந்தியில் தோழர் அசோகன் தலைமையில்,
துரையெனும் பெயருள தோழர் பாடி,
முடிக்க, என். வீ. நடராச னவர்களும்,
ம. கோ. மணியும்; மயூர நகரத்
தி. மு. கழகச் செயலா ளர், திரு
கிட்டப் பாவும்; கொள்கை விளக்கம்
தருவர் ஆங்கே பருவத் தமிழிலே !

30—10—55 ல், குடந்தை போர்ட்டர் நகரமன்றத்தில் :

குடமூக் கென்னும் கும்பகோ ணந்தனில்,
த. மதி அழகன் தலைமையில், அறிஞர்
அண்ணு அவர்கள் ஆங்கில மொழியிலே
அரிய தொருரை ஆற்றிடு வாரே !

30—10—55ல் குடந்தை மீனுட்சி தியேட்டரில் :

'மாணவர் எழுச்சி' எனும் பொருள் பற்றி,
அறிவுரை யைமதி அழகன் தருவார்,
'பொருளா தாரச் சீர்திருத் தம்குறித்து,
என்வி என்,அங் கெடுத்துக் கூறுவார்;
'சமுதா' யச்சீர் திருத்தம் என்னும்,
அரும்பொருள் குறித்து, அறிஞர் அண்ணு
இனிக்கும் தமிழில் எடுத்துரைப் பாரே !

★

திருச்சியிலே கூடுகிறது!

நமது

மாநில மாநாடு

திராவிடம் பெற்றிட — திட்டம் வகுத்திட

உங்களுக் குரிய பங்கினைச்
செலுத்திவிட் டீர்களா செயல் வீரர்களே

ஆசிரியரும், வெளியிடுபவரும் :—சுரதா, 12, படவேட்டம்மன் கோவில் தெரு, சென்னை-12. அச்சிட்டவர்:—D. ரத்தினவேலு, ஸ்ரீ பாரதி பிரஸ்.
19, ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெரு, சூளை, சென்னை-7
[ஆண்டு சந்தா ரு. 4. ஆறு மாதம் ரு. 2.]